பாணந்துரை பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்புஅபிப்பிராயம்

பாணந்துரைபிரதேச சபையின் 2024திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று,அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று,தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய2024 திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பாணந்துறை பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பராயமொன்று தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின்முக்கயித்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயமொன்றுக்காக அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றகளை எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிரந்தது.

1.2 மறுப்புஅபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நான் நதிக் கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயமொன்றை வெளியிடுகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களைஉள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின்நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின்வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க் நடத்தப்பட்ட கணக்காய்யின் அடிப்படையில் பாணந்துறை பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவதற்கு எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் அபிப்பராயத்தை மறுப்பதற்கான அடிப்படை பந்தியில் விபரக்கப்பட்ட விடயங்கள் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றுக்காக அடிப்படையை வழங்குவதற்கு போதுமான பொருத்தமான சான்றுகளை வழங்குவதற்கு எனக்கு முடியாதிருந்தது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுஅதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.7பந்தியின் பிரகாரம் பாதீட்டு அறிக்கையில் பாதீட்டு தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை	நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 6ஆம் அத்தியாயத்தின் 6.3 பந்தியின் பிரகாரம் காணிமற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக கணக்கீடு	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் தனித்தனியாக சமர்ப்ப்பதாக	

	செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பெறுமதி ரூபா 266,798,885 ஆன காணி, கட்டிடங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் 6.15 பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் எதிர்கால பொருளாதார நலன்களைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் அதில் எதிர்பார்ப்புக்களைப் ஏற்றுக்கொள்ளும் வகையில் பெறமானத் தேய்வு முறைமையொன்று தெரிவு செய்து பெறுமானத்தேய்வு செய்யவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மோட்டார் வாகனங்கள் தவிர ஏனைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு செயய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டு முதல் பெறுமானத்தேய்வு கொள்கையின் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய் வதற்கு நடவக்கை எடுக்கப்பட்டுள்ளது. .	நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கிடைத்திருந்த மூலதன மானியங்களிலிருந்து 2023 வரை மிகையாகவோ அல்லது பற்றாக்குறையாகவோ அங்கீகரிக்கப்படாதிருந்த மூலதன மீதிகள் 2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மூலதன மானியங்களின் பெறுமதியில் மீளாய்வாண்டில் மிகையாகவோ அல்லது பற்றாக்குறையாகவோ அங்கீகரிக்கப்பட்ட மூலதன மானியங்களின் மீளாய்வாண்டின்இறுதிய திகதியில் மிகையாகவோ அல்லது பற்றாக்குறையாகவோ அங்கீகரிக்கப்படாத மூலதன மானியங்களின் பெறுமதி போன்ற விவரங்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு இலக்கம் 10	2025 ஆம் ஆண்டின் போது இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு சீராக்கங்கள் செய்வதற்கு உள்ளதாக	நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள் சரியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

	தயாரிக்கப்படாதிருந்துடன் இதன் விளைவாக, மீளாய்வாண்டின் மிகை மற்றும் ஏனைய விரிவான வருமானம் சரியாக பிரதிபலிக்கப்படவில்லை.		
(ஆ)	மீளாய்வாண்டின் ஆரம்பத்திகதியில் மிகையாகவோ அல்லது பற்றாக்குறையாகவோ அங்கீகரிக்கப்படாத மூலதனச் செலவு மானியங்களின் அளவு, நடப்பாண்டின் வருமானத்திற்கான நிதிக் கூற்றுகளின் குறிப்பு 5 இல் பெறுமதி அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 13,190,177 தொகை சரியானதாக இல்லாமல் இருந்ததுடன் நடப்பாண்டில் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் பெறப்பட்ட மூலதனச் செலவு மானியங்களும் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் திருத்தங்கள் செய்து கொள்வதாக	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(இ)	2021 ஆம் ஆண்டில் ரூபா 81,000,000 ஆன முத்திரை கட்டணங்கள் மீளாய்வாண்டில் திருத்தப்பட்டபோது,அது ரூபா 80,000,000 என ரூபா 1,000,000 குறைத்துக் காட்டப்பட்டமை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் திருத்தங்கள் செய்து கொள்வதாக	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய இறைச்சி கடை வாடகைரூபா 2,286,896 மீதி என அட்டவணையில் எனக் காட்டப்பட்டிருந்தாலும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றினைத் தயாரிக்கும் போதுஅந்த உருப்படி விடுபட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் கணக்கீடு செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(உ)	உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து கெசல்வத்த புதிய பொதுச் சந்தையை நிர்மாணிப்பதற்கான மூன்றாவது கடன் தவணையான ரூபா. 2,855,300 தெகை 2024 ஜூன் 20 ஆந் திகதி மக்கள் வங்கியில் உள்ள ஒரு கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளரிடமிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது, 2024 ஜூலை 15 ஆந் திகதிய LLDF/PS0075/00012/2020/00007 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், அறிவிக்கப்பட்டிருந்த போதும் இது தொடர்பாக எந்த பற்றுசீட்டொன்று பதிவொன்றும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் கணக்கீடு செய்யப்படும் என்பதாக	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

(ஊ)	அனைத்து நடைமுறையல்லாத சொத்துக்களும் நிதிக் கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் கட்டிடங்கள்,வீதிகள், மதகுகள், பாலங்கள், அலுவலக உபகரணங்கள், தொட்டிகள் மற்றும் உபகரணங்கள் அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் திருத்தங்கள் செய்து கொள்வதாக.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட 11 கணக்கு மீதிகளுக்குரிய மீதி அதற்குரிய அட்டவணைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 758,599,799 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.	2025இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது அட்டவணைகள தயாரிக்கப்பட்டு பரீட்சித்து பார்த்து சமர்ப்பிப்பதாக	வேறுபாடுகளுக்கான காரணங்கள் கண்டுபிடித்து ஆராய்ந்து சரி செய்யப்பட வேண்டும்.

1.6.4கணக்காய்விற்காக தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மெய்மையாய்வு செய்வதற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 235,262,582 பெறுமதியான 11 கணக்கு விடயங்கள் திருப்திகரமாக மெய்மையாய்வ செய்ய முடியவில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை சமர்ப்பிக்கும் அட்டவணைகளை சமர்ப்பிப்பதாக	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்..

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழெ காட்டப்பட்டுள்ளன. .

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்			

(i)	149 ஆம் பிரிவு	சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் ஹொட்டலொன்று உணவகம் அல்லது தங்கும் விடுதி அதன் மொத்த ஆண்டு வருமானத்தில் ஒரு சதவீதம் வரை கட்டணம் ஒன்று அறவிட வேண்டியிருந்த போதிலும், சுற்றுலா ஹொட்டலில் இருந்து 2018 ஆம் ஆண்டு மீளாய்வாண்டு வரை வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	அத் தொகையை மீட்பதற்காக பாணந்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு 2019/66829ஆம் இலக்கத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன் தற்போது வழக்கு இன்னும் விசாரணையில் நடைபெற்று வருவாக.	பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	160 ஆம் பிரிவு	நிலுவை ஆதனவரி அறவிடுதலின் இறுதிப்படிமுறையாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்கவில்லை	நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்காக 12 சந்தர்ப்பங்களில் ஆதனங்களை தடைசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக.	பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. <u>நிதி மீளாய்வு</u>

2.1 <u>நிதி விளைவுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 284,988,769ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 76,769,142ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

வருமான மூலம்	2024 மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	2023 மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
)i(வீதவரியும் வரியும்	30,000	28,803	116,136	12,670	29,182	29,269	31,053	38,577
(ii) வாடகை	6,800	3,846	3,702	143	413	2,238	4,376	,2300
(iii) அனுமதிப் பத்திரக் கட்டணங் கள்	480	511	511	-	634	488	519	45
(iv) ஏனைய வருமானம்	12,003	12,044	9,791	2,253	13,270	10,584	10,573	55
மொத்தம்	**49,283**	**45,204**	**30,140**	**15,066**	**,43499**	**42,579**	**46,521**	**40,977**

2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2024 ஜனவரி 01 ,ல் உள்ளவாறு மொத்த திரட்டிய வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 38,576,875 ஆக இருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆந திகதி வரையிலும் அதில் ரூபா 21,331,953 அதாவது 55 சதவீதம் அறவிடப்பட்டு இருக்கவில்லை.	இதுவரைரூபா 4.400000 பெற்றுள்ளதாகவும் அது 26.62 வீதம் ஆக ,உள்ளதாக.	நிலுவை வருமானம் விரைவில் அறவிட வேண்டும்.
(ஆ)	செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் வருடாந்த பட்டியலிடல் ரூபா 28,805,578 ஆக இருந்ததுடன் அப்பட்டியலிடல்ரூபா 12,669,764 அதாவது 44 சதவீதம் மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ரூபா 50,000 மிகைத்த வீதவரி 13 வீத வரி அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவர் நிலுவை மீதி ரூபா 1,782,813 ஆக இருந்தது	நிலுவை டுிதாகையில் இதுவரை 31.57 ஆன சதவீதமொன்று அறவிடப்பட்டுள்ளதாகவும் அது ரூபா 50,000 ஐ08 வீதவரி அலகுகளிலிருந்து மிகைத்த ரூபா 1,366,961 தொகை வீதவரி அறவிட வேண்டியிருப்பதாக	நிலுவை வருமானம் விரைவில் அறவிட வேண்டும்.

(இ)	வருடாந்த கேள்வி அடிப்படையில் குத்தகை ஆதனங்களில் இருந்து 2024 ஆம் ஆண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 9,800,650 ஆக இருந்த போதும் அதில் ரூபா 2,253,473 அதாவது 23 சதவீதம் ஆண்டில் அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.	அறவிடுவதற்காக வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக..	நிலுவை வருமானம் விரைவில் அறவிட வேண்டும்.
(ஈ)	2024 ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 33,423 ஆன திரண்ட நிலுவை தொகையில் மீளாய்வாண்டில் எவ்வித தொகையும் அறவிடப்படாத இருந்தடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஆதனங்களில் இருந்து அறவிட வேண்டிய மொத்த நிலுவை ரூபா 2,286,896 ஆக இருந்தது.	2025 ஆம் ஆண்டில் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதாகவும் எஞ்சிய ரூபா 2,253,473 தொகையை அறவிடுவதற்காக வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நிலுவை வருமானம் விரைவில் அறவிட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் அறவிடப்பட வேண்டிய வியாபார நிலைய வாடகை வருமானம் ரூபாய் 2,299,534 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,817,300 அதாவது 79 சதவீதம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை.	ரூபா 1.383,900தொகையை பதிவழிப்பதற்காக கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கெசெல்வத்த பொதுச்சந்தையில் கடைகளுக்கு உரிய ரூபா 401,850 ஆன நிலுவைத் தொகை அறவிடுவதற்கு முடியாத நிலைமையில் உள்ளதாகவும்.	நிலுவை வருமானம் விரைவில் அறவிட வேண்டும்.
(ஊ)	கடை வாடகைக்காக வழங்கப்பட்டிருந்த அட்டவணையின் பிரகாரம் ஆரம்ப நிலுவை மீதி பெறுமதி மற்றும் ஆண்டின் பட்டியலிடப்பட்ட பெறுமதி ஆகிய இரண்டின் மொத்தம் ஆண்டில் சேகரிக்கப்பட வேண்டிய கடை வாடகை வருமானமாக இருக்க வேண்டிய போதிலும் அப்பெறுமதியை விட கூடிய பெறுமதி ஒன்று ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானமாக பதிவு செய்யப்பட்டிருந்தமை காரணத்தினால் அந்த அட்டவணையின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் சிக்கலாக இருந்தது	கணக்கீடு செய்யப்படாத ரூபா 110,800 ஆன வியாபார நிலைய வாடகை கணக்கீடு செய்யப்பட்டதாக.	அட்டவணைகள் சரியாகவும் பேணி செல்லப்பட வேண்டியதுடன் பேரேட்டு கணக்குகளுடன் ஒப்பிட்டு மேற்பாளரை செய்யப்பட வேண்டும்
(எ)	2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளின் பிரகாரம் நீதிமன்ற தண்டப் பனங்களுக்காக பெறவேண்டிய ரூபா 27,097,216 இருந்ததுடன் பட்டோலையின் பிரகாரம் அது ரூபா 15,232,576 ஆக இருந்தது. 2024 ஆம் ஆண்டின் போது 2023 ஆம் ஆண்டிற்காக கிடைத்திருந்த பெறுமதி ரூபா 15,189,368 ஆக இருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு சமர்ப்பிக்கும் இதனை திருத்தி சமர்ப்பிப்பதாக	வருமானம் சரியாக இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**கட்டிட திட்டங்களை அங்கீகரித்தல்**		
	கட்டிடங்கள் நிர்மாணம் தொடர்பாக 2024 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த விண்ணப்பங்களுக்கிடையே அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வதிவிட மற்றும் வியாபாரமாக முறையே 309 திட்டங்களில் 59 திட்டங்கள் மற்றும் 26 திட்டங்களில் 08 திட்டங்கள் மாத்திரம் ஆக இருந்தது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்ட எண்ணிக்கை பதிவிடும் 28 மற்றும் வியாபாரம் 01 ஆக இருந்தது.	36 வதிவிட கட்டிட விண்ணப்பங்கள் தற்போது அங்கீகரிக்கப் பட்டுள்ளதாக.	விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.
(ஆ)	**சுற்றாடல் சிக்கல்கள்** திக்கல வீதியில் ஆரம்ப ஆரம்ப இடத்தில் உள்ள வடிகால் மீறியவத்த கம்பத்த வீதி ஊடாக ஆறு வரை விக்கிர வீதி ஊடாக பயணிப்பதுடன் திக்கல வீதி ஊடாக பயணிப்பதுடன் திக்கல வீதி மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய தாக இருந்ததால் இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i)	2006 இன் 35ஆம் இலக்க இலங்கைகாணி மீள்நிரப்பல மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபன திருத்த சட்டத்தினால் மற்றும் 1982 இன் 52 ஆம் இலக்க சட்டத்தினாலும் 1976 இன் 27 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1968 இன் 15ஆம் இலக்க இலங்கை இலங்கைகாணி மீள்நிரப்பல மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபன சட்டத்தின் 4(ஆ)1 பிரிவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி இந்த வடிகால் இரண்டு பக்கமும் ஒதுக்கு வைக்கப்படாமல் இருந்தலுடன் கால்வரை வரை அத்துமீறிய நிர்மாணங்கள்	அத்துமீறிய நிர்மாணம் செய்தோர் மற்றும் கால்வாய் சுத்திகரிக்கும் நடவடிக்கைகள் ஈடுபடும் நபர்களுக்காக கட்டளை வழங்குவதற்கும் எதிர்வரும் நடவடிக்கை எடுக்க உள்ளதாக	பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வீடுகளில் மல சல மற்றும் ஏனைய கழிவுகளுடன் கூடிய குழாய் முறைமை .ந் கால்வாய்க்கு விடுவிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் இதன் காரணமாக வடிகாலின் நீர் மாசடைந்து இருந்தது.		
(ii)	திக்கலவீதியில் உள்ள வடிகால், இயற்கையாக செல்லும் வீதியை மாற்றி ஒரு தனியார் நிறுவனம் வழியாக செல்லும் வகையில் மாற்றியமைக்கப்பட்ட ஒரு கால்வாய் என்பதும், அவதானிக்கப்பட்டது.அவ்வாறே மழைக்காலத்தில்,.இந்த கால்வாயில் உள்ள நீர் அடைக்கப்பட்டு வீதிக்கு வெளியே செல்வது இடம்பெறுவதால் அதன் மூலம் அருகிலுள்ள மக்கள் பாதிப்புக்கு உட்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் இந்த வடிகாலில் இருந்து வெளியேறும் நீரைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக	பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	**கைவிடப்பட்ட பணிகள்**		
(i)	1998 ஆம் ஆண்டு முதல் 25 ஆண்டுகளாக இருந்த நீர் போக்குவரத்து சிக்கலை தீர்க்க தொடங்கப்பட்ட திப்பெத்த புஞ்ஞங்கந்த மாவத்தையில் உள்ள கஜுகஹவத்த காணியை ஒட்டியுள்ள அரசு காணியின் பொது வடிகால் அமைக்கும் திட்டத்தின் கீழ், தனியார் காணியின் வழியாக செல்லும் வடிகாண் மாத்திரம் சபை நிதியில் இருந்து ரூபா. 253,577 செலவில் நிர்மாணிக்கப்பட்டு மேலும்,செயற்திட்டம் பாதியிலேயே கைவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக,வீதியில் உள்ள வடிகாலில் இருந்து தனியார் காணிக்குள் மழைநீர் பாய்வதால் ஏற்பட்ட சேதத்திற்கு மேலதிமாக, மழைநீர் வடிகால் இல்லாததால் வீதியும் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது.	வடிகாலுக்காக காணியை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் இதற்காக ரூபா. 852,000 தொகை பாணந்துறை பிரதேச செயலகத்தில் வைப்புத்தொகையாக வைக்கப்பட்டுள்ளதாக.	செயற்திட்டத்தை பூர்த்தி செய்து சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	கெசல்வத்த பொதுச்சந்தை பழைய கட்டிடத்தை அகற்றி புதிய கட்டடம் ஒன்றை நிர்மானிப்பதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து 2021 செப்தெம்பர் 27 ஆம் திகதி ரூபா 20,000,000 கிடைத்திருந்ததுடன் ஒவ்வொரு மாதமும் அந்த கடன் தொகைக்காக வட்டித்தொகையாக ரூபா 150,000 செலுத்த வேண்டியிருந்தது. வழங்கப்பட்டுள்ள சலுவைக்காலம் ஒரு	பாணந்துறை பிரதேச சபையின் புதிய சபையின் அங்கீகாரத்தைப் பெற்று, சரியான பெறுகை முறையைப் பின்பற்றிய பின்னர், இந்தத் திட்டம் மீண்டும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வருடமும் 07 மாதங்களுமாக இருந்ததுடன் சலுகைக்காலத்தின் இறுதியில் தவணைப்பணம் செலுத்துதல் வேண்டும். 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி மேலும் ரூபா 4,231,000 கடன் தொகையொன்று உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் ஏப்ரல் மாத்திற்காக ரூபா 4,173.04 உம் மே மாததில் செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூபா 181,732.50 ஆக இருந்தத. 2024 யூன் 19 நே் திகதி மூன்றாவது கடன் தவணையாக ரூபா 2,855,300 சபைக்கு கிடைத்திருந்ததுடன் 2024 யூலை மாதம் முதல் ரூபா 401,734.23 தொகை மாதமொன்றுக்கு செலுத்த வேண்டியிருந்தது. கெசல்வத்த பொதுச்சந்தை பழைய கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்காகஉள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 20,000,000 ஆன முழுத் தொகையும் அதில் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையான ரூபா 105,094,983 இல் 20 சதவீதத்திற்கு சமமான முற்பணத் தொகையொன்று வழங்கப்பட்டிருநத போதும் இதுவரை அந்நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்ப்டிருந்ததுடன் நிர்மாண நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக கேள்வி கோரல் ஒன்றும் இடம்பெறவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய 2018/4 ஆம் இலக்கம் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி 2020 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது சபைக்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டுமென உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆம் திகதிய இலக்கம் LGD/10/A/4/ந.கி/2019 என்ற கடிதத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்ட போதிலும் சபையினால் 2024 ஆம் ஆண்டின் போது சில காணி கட்டிடங்கள், வீதிகள், மதகுகள், பாலங்கள் மற்றும்	பதிலளிக்கப்படவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள அறிவித்தல் பதாதைக்காக வருமான பரிசோதகரால் அறிவித்தல் பதாதைகளை தொடர்பாக பரிசோதனையொன்றை மேற்கொண்டு தகவல்களைச் சேகரித்து, தரவுத்தளத்தைத் முறையொன்றாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2025 ஆம் ஆண்டில் விளம்பரப் பலகைகள் பற்றிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருவதுடன் , அதன் பிரகாரம் ஒரு தரவுத்தளம் ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	விளம்பரப் பலகைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மற்றும் ஒரு தரவு முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும்.
(இ)	நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 16 இல்,ரூபா. 40,862,885 பெறுமதியான கட்டிடச் சேர்த்தல்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சேர்க்கப்படாதிருந்ததுடன்ரூபா. 36,222,383 தொகை நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தன.	பதிலளிக்கப்படவில்லை.	நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டும்.
(ஈ)	.ரூபா71,124,664 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் இயந்திரங்களின் பெறுமதியைக் காட்டும் அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், தளபாடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைத் தனித்தனியாகக் காட்ட அட்டவணைகள் தயாரிக்கப்படவில்லை.	2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் அவை சரியாக வழங்கப்பட்டுள்ளதாக	அனைத்து சொத்துக்களுக்கும் தனித்தனி அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும்.
(உ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24 இன் பிரகாரம் ”உடுகஹபசதுவ வீதி” என்று வீதியின் இருபுறமும் இரண்டு பெயர் பலகைகள் பொருத்தப்பட்ட வீதி, சபையின் வீதிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிறகு, இந்தப் பெயரை வீதிப் பதிவேட்டில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக	ிரதேச சபைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின்கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவர்று நிலவரப்படி, நிறுவனத்திற்குச் சொந்தமான 05 வாகனங்கள் இயங்காத நிலையில் இல்லாமல் இருந்ததுடன் அவற்றில் 10 வாகனங்கள் அகற்றுவதற்கு அடையாளம் காணப்பட்டிருந்தபோதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் கைதவிர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை.	தற்போது கைதவிர்ப்பிற்கு அடையாளம் காணப்பட்டுள்ள 10 வாகனங்களுக்கான மதிப்பீட்டு விலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு எதிர்வரும் பணிகளைத் தொடர முன்மொழியப்பட்டுள்ளது, மேலும் இயங்கும் நிலையில் இல்லாத 05 வாகனங்களில் ஒரு	ஓட்டநிலைமையில் இல்லாத மற்றும் திருத்த முடியாத வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		டிராக்டரை மாத்திரமே பழுதுபார்க்க வேண்டியுள்ளதாக.	

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின்கருத்துரை	பரிந்துரை
(அ)	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கு மேலதிமாக,அமைய,மாற்று, ஒப்பந்த மற்றும் தொழிலாளர் அடிப்படையில் முறையே 02, 01 மற்றும் 31 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர், மேலும் ஆண்டு முழுவதும் சபை நிதியிலிருந்து சம்பளமாக ரூபா. 15,075,059 தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. தற்போது ஒப்பந்த அடிப்படையில் 31 ஊழியர்கள் மாத்திரமே பணியமர்த்தப்பட்டுள்ளனர்,	தற்போது இரண்டு மாற்று ஊழியர்கள் மற்றும் உழைப்பு அடிப்படையில் 31 மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாக	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திட்டம் திருத்தம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	இடமாற்றம் செய்யப்பட்ட 8 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா. 1,369,127 ஓய்வு பெற்ற மற்றும் இறந்த 12 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா. 788,324,வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு அதிகாரியிடமிருந்து ரூபா 192,165 மற்றும் சேவையை விட்டு வெளியேறிய 4 அதிகாரிகளிடமிருந்து ரூபா 236,185 ஆகியவை 2024 திசெம்பர் வரை அறவிடப்படவில்லை.	,இடமாற்றம் செய்யப்பட்ட 3உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 715,602 தொகையும், ஓய்வுபெற்ற ஒவ்வொரு அதிகாரியிடமிருந்தும் ரூபா 158,150 தொகையும் 2025 மே 30 இல் உள்ளவாறு அறவிடப்படாதிருந்ததுடன், மேலும் மீதமுள்ள இடமாற்றம் செய்யப்பட்ட 5 உத்தியோகத்தர் களிடமிருந்து மாதாந்த தவணைகளில் கடன் தொகையாக அறவிடுவதாக.	நிலுவை கடன் மீதிகளை அவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதிகளை உரிய நிறுவனத்திற்கு தீர்க்கப்பட வேண்டிய போதிலும் சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 09 பேரிடமிருந்து மொத்தம் ரூபா 1,414,491 ஆன கடன் மீதியொன்று தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	இடமாற்றம் பெற்று வந்த அனைத்து உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தற்போது தீர்வு செய்யப்பட்டள்ளதாக	நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்..

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
புாணந்துறை பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டில் பாதீட்டின் மூலம் மீண்டெழும் அல்லாத செலவீனத்திற்காக ரூபா 55,100,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறாக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினம் ரூபா 51,934,622ஆக இருந்தது.	பதில் அளிக்கப்பவில்லை.	பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.